# தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்

பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.

தலைமை இடம் - சென்னை.

| S.நாகராஜன் | K.சந்திரசேகரன்,B.A | B.தியாகராஜன், M.Com., |
|---|---|---|
| தலைவர் | பொதுச்செயலாளர் | நிதிச்செயலாளர் |


**சுற்றறிக்கை எண் : 07/2019** நாள்: 03-08-2019

அன்புகெழுமிய சங்க உடன்பிறப்புகளுக்கு வணக்கம். 09-06-2019 அன்று நடைபெற்ற சங்கத்தின் உயர்மட்டக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வாயிலாக வாரிய நிர்வாகத்தின் முன்வைத்த, தீர்வு காணப்படவேண்டிய 11 கோரிக்கைகள் குறித்து 01-07-2019ம் நாளுக்குள் பேச்சுவார்த்தைகள் நடத்தி தீர்வுகாண நிர்வாகம் முன்வரவில்லை. எனவே, பிரச்சனைகளில் தீர்வு காண அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முடிவெடுத்திட 07-07-2019 அன்று மத்தியச்சங்கப் பொறுப்பாளர்கள் கூட்டம் கூட்டப்பட்டது. மத்தியச்சங்கப் பொறுப்பாளர்கள் கூட்டத்தில், ஏற்கனவே உயர்மட்டக்குழுக் கூட்டத்தில் முடிவெடுத்தபடி, தொழில் தகராறுகள் சட்டம் பிரிவு 22 உட்பிரிவு(1)ன்கீழ் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்திட வாரிய நிர்வாகத்திற்கு அறிவிப்புக் கொடுப்பதென முடிவெடுக்கப்பட்டது. எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் 08-07-2019 அன்று சங்கத்தின் சார்பில் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கான அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்பிரச்சனையில் தொழிலாளர் துறை இணைஆணையர் அவர்கள் தலையிட்டு, நமது சங்கத்தையும் வாரிய நிர்வாகத்தையும் 02-08-2019 அன்று அழைத்து சமரசப் பேச்சு வார்த்தைகளை துவக்கியுள்ளார். சமரசப் பேச்சு வார்த்தைகளில் நமது சங்கத்தின் சார்பில், பொதுச்செயலாளரோடு சங்கத் தலைவர், அமைப்புச்செயலாளர், உதவிப்பொதுச்செயலாளர், திரு.எஸ்.அபுத்தாயர் துணைத்தலைவர் மற்றும் சென்னை மேற்கு வட்டச்செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டோம். நிர்வாகத்தின் தரப்பில் வாரியச்செயலாளர், தலைமைப்பொறியாளர் பணியமைப்பு மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். நிர்வாகதரப்பில் நமது வேலைநிறுத்த அறிக்கைக்குட்பட்ட பிரச்சினைகளில் சிலவற்றில் முடிவுகள் எடுக்கப்பட்டுவிட்டதாகவும், சிலவற்றில் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து பிரச்சினைகள் வாரியாக, விரிவாக பேசப்பட்டதுடன், நிர்வாகம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் சம்மந்தமாக எழுத்துபூர்வமான அறிக்கையும் கொடுக்கப்பட்டது. சமரச பேச்சுவார்த்தையினை நடத்திய தொழிலாளர் தனி இணைஆணையர் அவர்கள், சமரச பேச்சுவார்த்ததை தொடங்கியுள்ளதால் 08-08-2019 முதல் நடத்த உத்தேசித்துள்ள வேலைநிறுத்த போராட்டத்தை கைவிடுமாறு கேட்டுக்கொண்டார். சங்கத்தின் சார்பில் வேலைநிறுத்தப்போராட்டத்தை ஒத்தி வைத்திடுவதாக தெரிவிக்கப்பட்டது.

**<u>பேச்சு வார்த்தையின் சாரம்சங்கள்:</u>**

1. வேலைப்பளு ஒப்பந்தப்படி பொறுப்புகள் அனுமதி 02-09-2019க்குள் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது.
2. கணக்காளர் IIம் நிலையில் இருந்து Iம் நிலையாக இணைக்கப்பட்டுள்ளவர்களுக்கு ஓர் ஆய்டுயர்வு வழங்கிட, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் ஒப்புதல் பெறப்பட்டுவிட்டது. இதற்கான செயல்முறை ஆணை விரைந்து வழங்கப்படும்.
3. 40 வயதுக்கு மேற்பட்ட மகளிர் மற்றும் ஊனமுற்ற கணக்காளர்களுக்கு 8 பேருக்கு இளநிலை உதவியாளர் (கணக்கு) பணி நியமனமும் 21 பேருக்கு

இளநிலை உதவியாளர் (நிர்வாகம்) பணி மாற்றமும் வழங்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள 19 விண்ணப்பங்களுக்கு விரைவில் (பதவிமாற்றம்) உத்திரவு வழங்கப்படும்.

4. சேலம், நாமக்கல் வட்ட பகுதி பணியாளர்களுக்கு திருத்தப்பட்ட வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி வழங்கிட உத்திரவு வழங்கப்பட்டுவிட்டது. (உத்திரவு எண்:147/நாள்:01-08-2019).
5. பகுதிநேர துப்புரவு பணியாளர்கள் இல்லாத அலுவலகங்களுக்கு, புதிய பணியாளர்களை அமர்த்தி 13 வட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதர வட்டங்களுக்கு வந்துள்ள முன்மொழிவுகளில் தகுதியான நபர்களுக்கு விரைவாக உத்திரவு வழங்க துரிதநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்களின் ஏனைய பிரச்சினைகளில் வாரிய உத்திரவும், தமிழக அரசு ஆணைகளையும் பரிசீலித்து சுமூகமான முடிவுகள் மேற்கொள்ளப்படும்.
6. வழக்குகளுக்குட்பட்ட ஒப்பந்த தொழலாளர்களின் வழக்கு விபரங்கள், உரிய அலுவலர்களிடம் கோரப்பட்டு உள்ளதாகவும் (வாரிய கடிதம் எண்: 106285/ 965/ ஜி65/ ஜி652/2011-11, நாள்: 29-07-2019) இதுசம்மந்தமான விவரங்களை சங்கமும் வழங்கிட கேட்டுக்கொள்ளப்பட்டது.
7. மேட்டூர் அனல்மின் நிலையம் I&II, மத்திய அலுவலகங்களுக்கு வேலை நேரத்தை 10.30மணிமுதல் 05.15 மணிவரை மாற்றி அமைத்திட 9(A) நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. (Lr.No:47517/A9/A92/2018-1, dt: 12-07-2019).
8. ஒழுங்கு நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டுவர 12-08-1983ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள காலவரையினை தவறாமல் கடைபிடித்திட அனைத்து அலுவலர்களுக்கும் உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. (கடித எண்: 046027/401/ஜி6/ ஜி62/ 2019, நாள்:23-07-2019).
9. பதவி உயர்வினை வழங்க நிர்ணயிக்கப்பட்டுள்ள குறும நாளினை (Crucial Date) இனிவரும் காலங்களில் களப்பணியாளர் உள்ளிட்ட அனைவருக்கும் தவறாமல் கடைபிடிக்கப்படும் என உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. (உத்திரவு எண் (i)கடித எண்: 042417/199/ ஜி46/ ஜி462/2019-2, நாள் 23-07-2019 (ii) Memo No: 036976/397/G.4/G.41/PAR/2019-2, dt: 30-07-2019).

ஏனைய பிரச்சினைகள் குறித்து நிர்வாகம் வழங்கியுள்ள பதிலுரை மீது சங்கத்தின் பதிலுரையினை (Re Jointer) தாக்கல் செய்திட அறிவுரை வழங்கி சமரசப்பேச்சு வார்த்தை மீண்டும் 12-09-2019க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

09-06-2019 அன்று நடைபெற்ற உயர்மட்டக்குழு தீர்மான எண்:4ன் வாயிலாக கிளை மற்றும் வட்டப்பகுதிகளுக்கு அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்ட இடங்களில் இடைக்கால பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுத்திட நிர்ணயிக்கப்பட்ட தேர்தல் விதிகள் படி தூத்துக்குடி விநியோக வட்டம், தூத்துக்குடி நகர், புறநகர், திருச்செந்தூர் ஆகிய கோட்டக்கிளைகளுக்கும், அதனைத்தொடர்ந்து தூத்துக்குடி மின்விநியோக வட்டக்குழுவிற்கும் பொறுப்பாளர்கள் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. நடைபெற்ற தேர்தல்களில் துத்துக்குடி நகர் கோட்டத்திற்கு திரு.S.வேல்முருகன் அவர்களும், புறநகர் கோட்டத்திற்கு திருமதி.K.ஷாஜாதிபேகம் அவர்களும், திருச்செந்தூர் கோட்டத்திற்கு திரு.V.பாலசுந்தரம் அவர்களும், கோட்டக்கிளைச்செயலாளர்களாகவும் திரு.P.பேச்சையா அவர்கள் தூத்துக்குடி வட்டத்தலைவராகவும், திரு.சு.வேல்முருகன் அவர்கள், தூத்துக்குடி வட்டச்செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 18 முதல் 20வரை இந்தோனேசியா நாட்டின் பாலி என்ற இடத்தில் நடைபெற உள்ள P.S.I. 14வது Asia Pacific Regional Conferenceல் நமது சங்கத்தின் பிரதிநிதியாக கலந்து கொண்டிட அமைப்புச்செயலாளர் திரு.B.கோபாலகிருஷ்ணன் அவர்கள் 16-09-2019 இரவு சென்னையிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டு 21-09-2019 அன்று இரவு சென்னை திரும்ப உள்ளார்.

சங்கத்தின் இணைச்செயலாளர் திரு.N.கணேசன் அவர்கள் தனது துணைவியார் திருமதி.வனஜா அவர்களுடன் ஐரோப்பிய கூட்டமைப்புச் சார்ந்த 12 நாடுகளுக்க 08-08-2019 முதல் 24-08-2019 வரை சுற்றுலா செல்ல உள்ளார். மேற்கண்டவர்கள் பயணம் சிறப்பாக அமைய வாழ்த்துகிறோம்.

கணக்குப்பிரிவில் 140 இளநிலை உதவியாளர்/ தட்டச்சர்கள் உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர். பதவி உயர்வு பெற்ற கடைசி நபர் M.ரஞ்சிதா திருப்பூர் வட்டம், உதவியாளர் பொறுப்பிலிருந்து, கணக்கு மேற்பார்வையாளர் பொறுப்பிற்கு பதவி உயர்வு பட்டியல் தயார் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. உதவிகணக்கு அலுவலர் பொறுப்பிற்கு பதவி உயர்வு பட்டியல் தயார் செய்திட கடித எண்: 039233/210/G30/G31/2019-2, நாள்: 08-07-2019 வாயிலாக 111 நபர்களுக்கு தகுதிகாண் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. பட்டியலில் இடம்பெறும் கடைசி நபர் திரு.A.ராஜா விருதுநகர் வட்டம். உதவி கணக்கு அலுவலர் பொறுப்பிலிருந்து கணக்கு அலுவலர் பொறுப்பிற்கு பதவி உயர்வு வழங்கிட அனுமதிக்கப்பட்ட பட்டியலில் வரிசை 64வரை இடம்பெற்றவர்களுக்கு பதவி உயர்வு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 11 நபர்களுக்கு பதவி உயர்வு உத்திரவுகள் வழங்கப்பட வேண்டும். கணக்கு அலுவலரிலிருந்து துணை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் பதவிஉயர்வு பட்டியல் தயார் செய்திட உயர்நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

நிர்வாகப்பிரிவில் இளநிலை உதிவியாளர் /தட்டச்சர் பொறுப்பிலிருந்து உதவியாளர் பொறுப்பிற்கு பதவி உயர்வு வழங்கிட பட்டியல் தயார் செய்யும் பணி நடைபெற்றுவருகிறது. உதவியாளர் பொறுப்பிலிருந்து நிர்வாக மேற்பார்வையாளர் பொறுப்பிற்கு அனுமதிக்கப்பட்ட பட்டியலில் இடம்பெற்றுள்ள 120 நபர்களில் 80 பேருக்கு பதவி உயர்வு உத்திரவுகள் வழங்கப்பட்டுள்ளது. பதவி உயர்வு பெற்ற கடைசிநபர் திரு.S.மேகநாதன் வடசென்னை அனல்மின் வட்டம். உதவி நிர்வாக அலுவலர் பொறுப்பிலிருந்து நிர்வாக அலுவலர் பொறுப்பிற்கு பதவி உயர்வு வழங்கிட திரு.S.சிவகுமார் கன்னியாகுமரி வட்டம் வரையிலான 34 நபர்களுக்கு தகுதிகாண் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. நிர்வாக மேற்பார்வையாளரிலிருந்து உதவி நிர்வாக அலுவலர் பொறுப்பிற்கு பதவி உயர்வு வழங்கிட அனுமதிக்கப்பட்ட பட்டியலில் இடம்பெற்றவர்களுள் 44 நபர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. பதவி உயர்வு பெற்ற கடைசி நபர் திருமதிR.மகேஸ்வரி மேட்டூர் வட்டம்.

அட்டைப்பட்டியல் பணித்தொகுப்பில், மதிப்பீட்டாளர் பொறுப்பிலிருந்து மதிப்பீட்டு ஆய்வாளர் பொறுப்பிற்கு பதவி உயர்வு வழங்கிட தகுதிகாண் அறிக்கை பல வட்டங்களிலிருந்து இன்னமும் அனுப்பப்படாமல் உள்ளது. மதிப்பீட்டாய்வாளர் பொறுப்பிலிருந்து வருவாய் மேலாளர்பொறுப்பிற்கு 262 நபர்களுக்கு தகுதிகாண் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. பட்டியலில் இடம்பெறும் கடைசிநபர் திரு.அருள் உதயகுமார் கோபி வட்டம். வருவாய் மேலாளரிலிருந்து மதிப்பீட்டு அலுவலர் பொறுப்பிற்கு பதவி உயர்வு பட்டியல் தயாரித்திட 175 நபர்களுக்கு தகுதிகாண் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது.பட்டியலில் இடம்பெறும் கடைசி நபர் திரு.M.ஷாஜஹான் சேலம்வட்டம்.

மதிப்பீட்டு அலுவலர் பொறுப்பிலிருந்து முதுநிலை மதிப்பீட்டு அலுவலர் பொறுப்பிற்கு பதவி உயர்வு வழங்கிட 29 நபர்களுக்கு தகுதிகாண் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. பட்டியலில் இடம்பெறும் கடைசிநபர் திரு.B.இராஜேந்திரன் கோபிவட்டம்.

இளநிலை பொறியாளர் IIம் நிலையிலிருந்து முதல்நிலைபொறுப்பிற்கு பதவி உயர்வு வழங்குவது அதனைத் தொடர்ந்து இளநிலை உதவியாளர் IIம் நிலை பொறுப்புக்கு, களப்பிரிவு ஊழியர்களிலிருந்து பதவி உயர்வு வழங்கிடவும், நடவடிக்கைகள் எடுக்கவும் நிர்வாகத்தை வலியுறுத்தியுள்ளோம்.

உள்முகத்தேர்வு மூலம் இளநிலை உதவியாளர் பொறுப்பிற்கும், தொழில்நுட்ப உதவியாளர் பொறுப்பிற்கும் தகுதி உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து விரைவில் நியமித்திட வற்புறுத்தியுள்ளோம்.

கேங்மேன் நியமனம் தொடர்பாக நமது சங்கம் உள்ளிட்ட 4 சங்கங்களின் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுத்திட்ட வழக்குகள் 05-08-2019 அன்று விசாரணைக்கு வரஉள்ளது.

எதிர்வரும் 15-09-2019 அன்று சங்கத்தின் 184 வது மாநிலச்செயற்குழுக் கூட்டத்தை சென்னையில் கூட்டிட உத்தேசித்துள்ளோம்.

எதிர்வரும் 15-08-2019 அன்று மேட்டூர் வட்டத்தின் சார்பில் மேட்டூரில் மறைந்த முன்னாள் தலைவர் திரு.சீவ.வில்சன்ரத்தினசாமி, முன்னாள் பொதுச்செயலாளர் திரு.ச.வெ.அங்கப்பன், முன்னாள் அமைப்புச்செயலாளர் திரு.சு.முருகேசன், முன்னாள் மேட்டூர் அனல்மின் வட்டச்செயலாளர் திரு.க.முத்துசாமி ஆகியோரின் படத்திறப்பு நிகழ்ச்சியும், சங்கத்தின் சார்பில் நடத்திட திட்டமிட்ட வேலைநிறுத்தப் போராட்ட விளக்கக் கூட்டமும் நடைபெறஉள்ளது.

களப்பிரிவு மற்றும் அலுவலகப்பிரிவு ஊழியர்கள் ஆகியவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மாற்றுப்பணி உத்திரவுகளை இரத்து செய்திடவும், அவர்களை அவரவர் சொந்த பணிஇடங்களுக்கு அனுப்பிட வேண்டும் என தலைமைப்பொறியாளர் பணிஅமைப்பு அவர்கள் 11-07-2019 மற்றும் 18-07-2019 ஆகிய நாட்களில் உத்திரவுகள் வழங்கி உள்ளார். இந்த உத்திரவுகள் ஆங்காங்கு அமுல்படுத்தப்பட்டது குறித்த விபரங்களை மத்திய சங்கத்திற்கு தகவல் தெரிவித்திட பொறுப்பாளர்களை வேண்டுகின்றோம்.

வாழ்த்துக்கள்

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்

பெறுநர் : மத்திய அலுவலக கிளைச்செயலாளர்கள், உதவிகோட்டச் செயலாளர்கள், கோட்டச்செயலாளர்கள், வட்ட மகளிர் அணிச்செயலாளர்கள், வட்டச்செயலாளர்கள், வட்டத்தலைவர்கள், உதவி மண்டலச்செயலாளர்கள், மண்டலச்செயலாளர்கள், மற்றும் மத்திய சங்கப் பொறுப்பாளர்கள்.

நகல் : செய்திமடல்.